जय जय शङ्कर  हर हर शङ्कर

# Voice of Kamakoti

Volume -19
Issue - 7

November
2012

Highlighting the activities of Sri Kanchi Kamakoti Peetam

Price : Rs. 15/-



உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்டோ ள் சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே.

# EVENTS

Sri Srinivasa Kalyanam held at Kanchipuram on 29-9-2012












# EVENTS

Sri Srinivasa Kalyanam held at Kanchipuram on 29-9-2012Viswaroopayathra – 30-7-2012





Viswaroopayathra – 30-7-2012










Award giving function to successful candidates in Sastras





# ஸ்ரீ மஹாசுவாமிகள் அருளுரை



நமது தேசத்திற்கு இந்தியா என்று பெயர் வழங்குகிறது. ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையில் இந்தியா தான். பண்டை நாளில் இதற்குப் பாரதபூமி என்று பெயர். இதில் வஸிக்கிற ஜனங்களின் க்ஷேமத்திற்காக ஒவ்வொரு சாஸ்திரமும் ஏற்பட்டிருக்கிறது. தேகத்தை சௌக்கியமாக வைத்துக் கொள்ளுவதற்காகவும், அகால மரணம் இல்லாமலிருக்கும்படி செய்வதற்காகவும் ஒரு சாஸ்திரம் உண்டு. அதற்கு ஆயுர்வேதம் என்று பெயர். ஆயுள் விருத்தி ஆக வேண்டியதற்கும், இருக்கிற வரையில் கஷ்டமில்லாமலிருக்கும்படிச் செய்யவும், இந்த சாஸ்திரம் பல உபாயங்களைச் சொல்லுகிறது. இந்த நாட்டில் உற்பத்தியாகும் ஒஷதிகளைக் கொண்டு இந்த நாட்டு ஜனங்களின் ரோகங்களை நிவர்த்திக்க ஆயுர்வேதம் வழிகளைச் சொல்லியிருக்கிறது. இராஜாங்கத்தார் வெள்ளைக்காரரின் சிகித்ஸை முறைகளையே ஆதரித்து வந்திருக்கிறார்கள். ஆனால் ராஜாங்கத்தில் மந்திரிகள் நமது ஜனங்களான பிறகு பனகால் ராஜா அவர்கள் நமது தேச ஒஷதிகள்தான் நமக்குத் தகுதி என்றும், இதர முறைகள் விபரீதமென்றும் நினைத்து இந்த ஊரில் ஆயுர்வேத பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தாரர். வெள்ளைக்கார வைத்திய முறைக்குச் செய்யப்படும் உபகாரத்தில் ஆயிரத்தில் ஒன்றுகூட இந்தப் பள்ளிக்கூடத்திற்குச் செய்யப்படவில்லை; ஆயினும் பனகால் ராஜா ஸமஸ்கிருதத்தில் நல்ல படிப்புள்ளவராகையால் நமது சாஸ்திரங்களை ஆதரிக்க வேண்டுமென்று அபிமானமுடையவராக இருந்தார். அவர் இன்னும் சிறிது காலமிருந்தால் இன்னும் அதிகமாகச் செய்திருப்பார். ஆயுர்வேத சாஸ்திரம் ஒன்றுதான் சிறிது ஆதரிக்கப்படுகிறது. நமது கணிதம் முதலியவைகளை இன்னும் ராஜாங்கத்தார் ஆதரிக்கவில்லை. அவர்களுடைய நாட்டு சாஸ்திரங்களையே நமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறார்கள். நமது பனகால் ராஜா ஒருவர் மந்திரியானதால் தான் ஆயுர்வேதம் சிறிது கடாக்ஷம் பெற்றது. பனகால் ராஜா பெரிய தர்மத்தைச் செய்தவர். தேஹத்தைப் பற்றி ஆயுர்வேதம் சொல்லுவது போல் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு சாஸ்திரம் இருக்கிறது. வெள்ளைக்கார தேசங்களிலும் பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஆனால் சென்ற 100 வருஷங்களில்தான் அவை அவர்களால் விருத்தி செய்யப்பட்டன. பிற நாடுகளைப் பிடித்து அவர்கள் செல்வத்தில் ஓங்கின பிறகே சாஸ்திர அபிவிருத்திக்காகப் பணத்தை செலவிட்டு பலன் அடைந்திருக்கிறார்கள்.

## ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

## ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அருளுரை



சூரியன் உதித்தால் எப்படித் தாமரை மலர்கிறதோ அதேபோல் கடவுள் நினைப்பு இருந்தால் நம் மனம் என்னும் தாமரையும் ஆனந்தத்துடன் மலர்ந்து இருக்கும்.

தாமரைப்பூவை எப்படி வண்டு வந்து அண்டுகிறதோ அதே போல் நமது மனத்தில் விஷயங்கள் வந்து அண்டுகின்றன.

தாமரையானது தண்ணீரில் இருந்தால்தான் செழிப்புற்று இருக்கும். அதே போல் நம் மனம் கருணை (அன்பு) என்னும் குணத்தில் இருந்தால்தான் அது சாந்தமாக இருக்கும்.

தாமரைத் தன்டில் நூலினால் எப்படிப் பெரிய பிராணியைக் கட்ட முடியாதோ அதே போல் நம் மனத்தின் நினைப்பினால் மாத்திரம் எல்லாக் காரியத்தையும் செய்ய முடியாது.

தாமரைப்பூ எப்படி வாசனையுடன் திகழ்கிறதோ அதேபோல் நம் மனமும் நல்ல எண்ணத்துடன் திகழ வேண்டும்.

தாமரைப்பூ எப்படி சிவப்பாகவும், வெண்மையாகவும் இருக்கிறதோ அதே போல் நம் மனத்தில் ரஜோ குணமும் ஸத்வ குணமும் இருக்கிறது. செந்தாமரை ரஜோ குணம், வெண்தாமரை ஸத்வகுணம்.

தாமரைத் தண்டு எவ்விதம் கருப்பாக இருக்கின்றதோ அதே போல் நம்மனம் தமோ குணம் உடையதாய் இருக்கிறது.

தாமரைக் குளத்தில் ஜலமானது எப்படி எப்பொழுதும் ஜில் என்று இருக்கிறதோ அதுபோல் நம் மனதானது கடவுள் நினைப்போடு இருந்தால் எப்பொழுதும் சாந்தமாயும் குளுமையாகவும் இருக்கும்.

சந்தன மரத்தைப் பாம்புகள் சுற்றிக் கொண்டே இருக்கும். ஆனால் சந்தன மரத்திற்கோ, சந்தனக் கட்டைக்கோ அதனால் எவ்வித கெடுதலும் ஏற்படாது. அதோ போல் மகான்கள் இடத்தில் எவ்வளவு துஷ்டர்கள் இருந்தாலும் அவர்களுடைய மனத்திற்கோ, உடலுக்கோ ஒருவிதமான மாறுதலும் ஏற்படுவது இல்லை.

நம் மனத்தைச் சிந்தனை அற்றதாகச் செய்ய முயலுகிறோம். ஆனால் முடியவில்லை. மஹான்களோ வெளியில் சிந்தனையற்று இருக்கும் சித்தத்தை சிந்திக்க வேண்டுமேயென்று சிந்தனைக்கு உட்பட்டு மிகவும் சிரமப்பட்டுச் சித்தத்தை உலக சிந்தனைக்கு கொண்டு வருகிறார்கள்.

## ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பொன்மொழிகள்



சிவபெருமானின் கருணையே கருணை. ஆபத்பாந்தவன், அநாத ரக்ஷகன், என்ற பெயர்களெல்லாம் அந்த மகேச்வரனுக்குத்தான் பொருந்தும் என்கிறார் ஸ்ரீமான் நீலகண்ட தீக்ஷிதர். அவர் இயற்றிய நீலகண்ட விஜய சம்பு என்ற நூலில் அதன் ஆரம்பத்திலேயே,

நிஷ்க்ராந்தே கரளே த்ருத<br>ஸுரகணே நிஸ்சேஷ்டிதே விஷ்டபே ।<br>மாபைஷ்டேதி கிராவிராஸ துரி யோ<br>தேவஸ் தமேவ ஸ்தும: ।।

என்ற தோத்திரம் செய்கிறார் கவி.

கால கூட விஷம் தோன்றியதும் தேவக் கூட்டம் அனைத்தும் கிட்ட நெருங்க முடியாமல் ஓட்டம் பிடித்தது. உலகமே செயலற்றுப் போயிற்று. அப்போது பயம் வேண்டாம் என்று அபயம் அளித்தபடி அங்கே தோன்றிய மஹாதேவனைத் தோத்திரம் செய்கிறேம் என்கிறார். நீலகண்ட தீக்ஷிதர் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, மதுரையை ஆண்ட மிகவும் பிரசித்த பெற்ற திருமலை நாயக்க மன்னரிடம் மந்திரி பதவியை வகித்தவர். அரசியலில் மிகவும் கைதேர்ந்தவராக விளங்கிய அவர், சம்ஸ்கிருத இலக்கியங்களில் மிக்க திறமை வாய்ந்த மகாகவியாகவும் விளங்கினார். பரமேச்வர அம்சமாக அவதரித்த மகான் அப்பய்ய தீக்ஷிதரின் தம்பி பேரன் என்ற பெருமையும் அவருக்கு உண்டு. அந்த மகான் தான் எனக்கு வித்யா குரு என்கிறார் நீலகண்ட தீக்ஷிதர். சிவலீலார்வணம் என்ற மகா காவியம் மற்றும் பல நூல்களை எழுதியவர் இவர். கத்யம், பத்யம் (உரைநடை, செய்யுள்) இரண்டும் கலந்து எழுதிய நூலைச் சம்பூ என்று கூறுவர். அந்த வகையில் அமைந்த நீலகண்ட விஜய சம்பூ பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்த விஷயத்தை விளக்குகிறது. பதங்களைத் தேடித் தேடி பொறுக்கிப் பொறுக்கி போட்டு மிகவும் சிரமப்பட்டுக் காவியமியற்றும் கவிகள் பலர் இருக்கின்றனர். ஆனால் இவரோ மிகவும் விளையாட்டாகவும் மற்ற காவியங்களைக் காப்பி அடிக்காமலும் அழகாகவும் தெளிவாகவும் ரஸமாகவும் தம் நூல்களை இயற்றிப் புகழ் பெற்றிருக்கிறார். தேவலோகம் என்பது சுகபோகங்களுக்கெல்லாம் இருப்பிடமாகத் திகழ்வது. கல்ப விருக்ஷம், காமதேனு போன்றவை. நம் விருப்பங்களை நிறைவேற்றுபவை அங்கே இருக்கின்றன. மந்தாரம் பாரிஜாதம் போன்ற பூத்துக்குலுங்கும் விருக்ஷங்களும் நறுமணத்தை வாரி வழங்கிய வண்ணம் இருக்கின்றன. ரம்பை, ஊர்வசி போன்ற நடனமாதர்கள், யக்ஷர், கின்னரர், கந்தர்வர் போன்ற துதிபாடர்கள் இன்னிசையைப் பொழிந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

## శ్రీ కామకోటి ఆచార్య పరంపర

### దండిభోట్ల నాగేశ్వర రావు

సమస్త భారతావనిలోని ధార్మిక, ఆధ్యాత్మిక, దర్శనాది రంగములపై ఎనలేని ప్రభావము చూపి, కోట్లాదిజనులకు ముక్తిమార్గోపదేశము చేసి, ఆర్షధర్మమునకు ఈ భూ ని తిరిగి పట్టుగొమ్మగా మార్చి, నాస్తిక-హేతువాద-ద్వైతాది వైరుధ్యాద్రిని అద్వైతమత ఝంఝామారుతముతో తుత్తునియలు చేసి 'జగద్గురువు'గా నుతికెక్కిన ఆదిశంకరభగవత్పాదులు అంత్యమున కాంచీపురమునకు చేరుకుని తమ ఇహలోక యాత్ర చాలించిరి. సప్తమోక్షపురములలో ఒకటైన కాంచీపురమునందే భగవత్పాదులు తమ పాంచభౌతికమైన శరీరమును త్యజించిరను షయమును నిర్ధారించుటకు అనేక చారిత్రక ఆధారములు అందుబాటులోనున్న.

'శివరహస్యము' (కానరీస్ ఎడిషన్ 32, జయచామరాజేంద్రసిరీస్, మైసూర్) అనే ప్రామాణిక గ్రంథమునందలి 16వ అధ్యాయములో నలుబదిఆరవ శ్లోకము యోగ, భోగ, వర, ముక్తి, మోక్షలింగములకు ఆదిశంకరులు సలిపిన పూజలను, అన్యమతాచార్యులపై శంకర జయములను ప్రస్తావన చేయుచూ తమ స్వంత ఆశ్రమమైన కాంచీపురమునందు భగవత్పాదులు సిద్ధిపొందారని తెలుపుచున్నది.

'మార్కండేయ సంహిత' యను నూరు ఖండములలో వ్రాయబడిన పురాణగ్రంథమునందలి డెబ్బదిరెండవ ఖండములోని ఏడవ పరిష్పందము (ఉప భాగము)లో సైతం ఆదిశంకరుల జీ తచరిత్రము సంక్షిప్తముగా లభ్యమగుచున్నది. సంస్కృతగ్రంథముల వరణపట్టికలో 'శంకరచరితమ'ను పేర ఈ జీ తచరిత్రను చూడవచ్చును. ప్రాచ్యభాషా శోధనా స ంతి, మైసూరు శ్వ ద్యాలయము వారిచే 1981లో ప్రచురితమైన ఆరవ వాల్యూమ్‌నందు 191వ పేజీలోని ఆ శ్లోకము ఆదిశంకరభగవత్పాదులు కాంచీపురమునందు సిద్ధిపొందిరను షయమును ధృ కరించుచున్నది. కాంచీపురమునందు దే కామాక్షిని పునఃప్రతిష్ఠ చేసిన అనంతరం భగవత్పాదులు తమ ఇహలోక యాత్రను చాలించి కైలాసమునకేగిరన్నది అందలి వరణ.

# ஸனாதன தர்மம்

ஸ்ரீ பகவத் கீதா பாஷ்யத்தில் ஸ்ரீ ஆதி சங்கராசார்யார் அவர்கள் கீழ் கண்ட படி சொல்லியிருக்கிறார்கள்:–

> ब्राह्मण्यस्य हि रक्षणे रक्षित: स्यात् वैदिको धर्म : ।
> तदधीनत्वात् वर्णाश्रमधर्माणाम् ।।

ப்ராஹ்மண்யம் ஸரியாக ரக்ஷிக்கப்பட்டால் எல்லா வர்ணாச்ரமங்களும் தானே ரக்ஷிக்கப்படும் என்பது இதன் கருத்து.

இந்தக் காலங்களில் எல்லாம் அலங்கோலமாக இருப்பது கண்கூடு. இந்நிலையில் நம்மால் கூடுமான வரையில் அற்ப அளவாவது ப்ராஹ்மண் யத்தை வெளிப்பகட்டன்னியில் ஆத்மார்த்தமாக அனுஷ்டிக்க ப்ரயத்தனப்படுவது ஒன்றே, மரத்திண் வேரில் ஜலத்தை விடுவதைப் போன்றதாகும்.

சில காலத்திற்கு முன் ஒவ்வொரு ஸமூகத்திலும் அதர்மம், அனாசாரம் நேர்ந்தால் அதை விசாரித்து, அது ஸம்பந்தமான அவர்களை விலக்கியோ, சுத்தி செய்தோ, ஸமூகம் அதிகம் கெடாமல் ரக்ஷிக்கப்பட்டு வந்தது.

தற்காலம், ஸமூகம் சிதறிக்கிடக்கும் நிலைமையில், அவரவர்களே நம் தர்மம் என்னவென்பதைத் தெரிந்து கொண்டும், தாங்களே சீர்திருத்திக் கொண்டும், அடியோடு தர்மத்தை மறந்து விடாமல் தங்கள் சக்திக்குக் கொஞ்சம் அதிகமாகவே ச்ரமப்பட்டாவது ஆசாரங்கள், ஆத்ம குணங்கள் இவைகளை அனுஷ்டித்து வருவதன் மூலம் ஸர்வப் பிராணிகளின் க்ஷேமத்தை உண்டாக்க பங்கு எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இவ்விஷயத்தில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞைப்படி நம் சாஸ்த்ரங்களை அறிந்த அநேக பெரியோர்களின் ஸஹாயத்தைக் கொண்டு, ப்ராஹ்மணர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் என்ன என்னவென்பதை ஒவ்வொரு ப்ராஹ்மண குடும்பத்துக்கும் ஞாபகமூட்டும் ஸேவை செய்வதாக உத்தேசித்திருக்கிறது.

இதற்காக பொது தர்ம விஷயங்கள், ப்ரயோக விஷயங்கள், மந்த்ரார்த்த விஷயங்கள் முதலியன ஸம்பந்தமான விஷயங்களை இப்பகுதியில் வெளியிட எண்ணியுள்ளோம். இதனைச் சுற்றுப்பார்வைக்கு அனுப்பியோ (Circulate), அல்லது வினியோகித்தோ (Distribution), அல்லது பஜனை விசேஷ ப்ரஸ்துதங்கள் முதலிய ஸந்தர்பங்களில் ப்ராஹ்மண ஸமூகம் சேரும் இடங்களில் படித்துக்காட்டியோ, அல்லது அந்தந்த பிரதேசங்களுக்கு உசிதமாகத் தங்களுக்கு அவ்வப்போது தோன்றும் வேறு எந்த முறையிலாவது ஸ்ரீ சரணர்களின் உத்தேசத்தை (எல்லா ப்ராஹ்மண குடும்பங்களும் ப்ரசுரங்களில் உள்ள விஷயங்களை அறியவேண்டும் என்ற உத்தேசம்) பூர்த்திசெய்யும்படி கேட்டுக்–கொள்ளப்படுகிறது. பெரிய கிராமமாக இருந்தால் அநேக இடங்களில் அநேகர் இந்த கைங்கர்யம் செய்ய வேண்டியிருக்கும். ஆகையால் இது விஷயமான கைங்கர்யம் செய்யக்கூடிய தர்ம ப்ரவிருத்தியுள்ளவர்கள் யாராவது தங்களுக்குத் தெரிந்தால் அவர்களுக்கும் இதைத் தெரிவித்து, அவர்களுடைய முழு விலாஸங்களையும் ஸ்ரீமடத்திற்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட ஏற்பாடுகளில் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறு ஏதாவது ஆலோசனைகள் தோன்றினால் அவைகளையும் தெரிவிக்கவும். மேற்கூறிய நோக்கம் நிறைவேற தாங்கள் அடியிற்கண்ட விவரங்கள் சுருக்கமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. இது தொடர்பாக கைங்கர்யம் செய்யக்கூடிய தர்மத்தில் ஈடுபாடு உள்ள யார் யாருக்கு இந்த இதழை அனுப்ப வேண்டுமோ அவர்களது முழு முகவரி - மின்னஞ்சல் முகவரியுடன்

2. தாங்கள் வசிக்கும் இடத்தில் எல்லோரும் படிக்கும்படியான தங்களுக்கு இவ்விதழ் எத்தனை பிரதிகள் தேவை

3. தங்கள் தொகுதியில் உள்ள சமய ஆன்மிக சமுதாய சிந்தனையுடன் கூடிய இயக்கங்கள் பற்றிய முழு முகவரி

4. இது தொடர்பாக தாங்கள் எவ்வகையில் ஈடுபட்டு செயல்புரிய முடியும். தங்களுடைய மேலான ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

ஸ்வதர்ம அனுஷ்டானமே உலக நன்மைக்கு உண்மையான காரணம் என்பது நமது மதத்தின் சித்தாந்தம் ஆனதால் தாங்கள் இந்த மகத்தான கைங்கர்யத்தில் ஈடுபடும்படிகேட்டுக் கொள்கிறோம்.

இது விஷயமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

எண். 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம் - 631502

தொலைபேசி எண். 044 - 27233115

தங்களது கடித உரையின் மேல் "**தர்ம ரக்ஷணம்**"


**SRI KAMAKOTI PRADEEPAM**

A Spiritual Monthly Magazine of

**Sri Kanchi Kamakoti Peetam**

For More Details :

044 - 27222115 / 27233115



பாரத நாட்டின் பண்டைய கலாச்சாரத்தையும் இன்றைய விக்ஞானத்தையும் இணைக்கும் பாலமாக இருக்கும் சமஸ்கிருத மொழியை வளர்க்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட

**"ஸம்ஸ்க்ருத ஸ்ரீ"**

மாத இதழுக்கு தாங்கள் சந்தாதாரராக சேர்ந்து ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். தொடர்பு தொலைபேசி எண். 9094153190 044 - 24951402

# IN ADORATION OF KĀMĀKṢĪ

Dr. R. Asha

*'Sarasvatī manohari'* - 3

'सरसीरुहाक्षि सदाशिवसाक्षि करुणाकटाक्षि पाहि कामाक्षि'

***Sarasīruhākṣi*** – One whose eyes are like lotus!

The lotus is one of the most commonly used motifs in Indian tradition with a lot of mythology and mysticism attached to it. It is the abode of Śrī, the Goddess of prosperity, one of whose names is *'Padmavāsinī'.*

On a higher plane, the lotus symbolizes the blossoming forth of knowledge. The *hṛt-padma*-heart-lotus also occupies a prominent position in spiritual disciplines where one is asked to meditate on the Supreme in the heart. On a lower plane, it is customary to compare the eyes of a beautiful lady to a lotus in poetical tradition. When such is the case, what to speak of the eyes of Kāmākṣī who is the Highest Feminine Principle personified! Here, the comparison is even more significant because, Her two eyes are Sarasvatī and Lakṣmī, who are picturised as seated on lotuses.

*Sarasīruhākṣi* – Ambā who has lotus-like eyes – is a beautiful concept to visualize and very pleasing to meditate upon.

Mūka kavi goes a step further and says that Her eyes are the lotus itself – *'kamalameva vilocanaṁ te'.*

नीलालका मधुकरन्ति मनोज्ञनासा–
मुक्तारुच: प्रकटरूढबिसाङ्कुरन्ति ।
कारुण्यमम्ब मकरन्दति कामकोटि
मन्ये तत: कमलमेव विलोचनं ते ।।

*(Kaṭākṣa-śatakam* 75)

Here, he says that the dark curly locks of Her hair are bees eager to savour the honey in Her lotus-eyes. The pearls (of the nose-ring) on the end of Her nose are like the sprouted ends of lotus-filaments. What is the honey here? It is *karuṇā,* Her compassion. Elsewhere, he says that Her eyes are beautified by the swirl of compassion – *'kāruṇya-vibhrama-juṣā'.* While Devi's eyes are capable of manifesting all emotions *(cf., Saundaryalaharī* 51), from the point of view of the suffering soul, it is compassion which is the most beautifying. [Incidentally, Ācārya also uses the motifs of the bees and lotus-filament in his *Saundaryalaharī* 45. There it is the beauty of the face which is said to surpass that of the lotus].

Going further in the description of Devī's lotus-eyes, Mūka says –

कामाक्षि मन्मथरिपोरवलोकनेषु
कान्तं पयोजमिव तावकमक्षिपात: ।
प्रेमागमो दिवसवद्विकचीकरोति
लज्जाभरो रजनिवन्मुकुलीकरोति ।।

*(Kaṭākṣa-śatakam* 73)

When the Lord looks at Her, She reciprocates with love and bashfulness. Then, Her eyes blossom with love (like the lotus during the day) and at the same time shrink with shyness (like lotus closes during night).

What an unusual lotus which blooms and shrinks at the same time!

To be continued….

The author can be contacted at asharsree@gmail.com

## கார்த்திகை மாத ஶ்ராத்த நிதி நிர்ணயம்

*சில பஞ்சாங்கங்களில் நிகழும் ஸ்வஸ்திஶ்ரீ நந்தன வருடம் கார்த்திகை (வ்ருஶ்சிக) மாதம் ஶுக்ல பக்ஷ த்ருதீயைக்குண்டான ஶ்ராத்த திதியானது தவறுதலாக கார்த்திகை மாதம் 1ம் தேதி (நவம்பர் 16, 2012) அன்று கொடுக்கப்பட்டுள்ளது. அதை கார்த்திகை மாதம் 30ம் தேதி (டிஸம்பர் 15, 2012) அன்றே செய்ய வேண்டும்.*

*ஒரு ஸௌர மாஸத்தில் குறிப்பிட்ட திதியானது இரண்டு நாட்களில் (மாதத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும்) அபராஹ்ண வ்யாப்தியுடன் வந்தால் இரண்டாவதாக (அதாவது மாத இறுதியில்) வரும் நாளில் ஶ்ராத்தம் செய்ய வேண்டும். அந்நாளில் க்ரஹணம், ஸங்க்ரமணம் முதலிய தோஷம் ஏற்பட்டால் இரண்டாவது நாளிலேயே செய்யவேண்டும் என்பது ஶாஸ்த்ரமாகும்.*

*வரும் கார்த்திகை (வ்ருஶ்சிக) மாஸத்தில் 1 மற்றும் 30 தேதிகளில் ஶுக்ல த்ருதீயை அபராஹ்ண வ்யாப்தியுடன் உள்ளது. த்ருக்கணித ப்ரகாரமும் வாக்ய கணிதத்தின் அஹோராத்ர துஷ்ட பக்ஷத்திலும் இரண்டு நாட்களிலும் ஸங்க்ரமண தோஷம் உண்டு. வாக்ய கணிதத்தில் அர்த்தராத்ர துஷ்ட பக்ஷத்தில் ப்ரகாரம் இரண்டாவது நாளில் ஸங்க்ரமண தோஷமே இல்லை. இப்படியிருக்க இரண்டாவது நாள், அதாவது கார்த்திகை 30ம் தேதி (டிஸம்பர் 15, 2012) தான் வ்ருஶ்சிக ஶுக்ல த்ருதீயைக்குண்மான ஶ்ரார்த்தத்தைச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது.*

*(நமது ஶ்ரீமட பஞ்சாங்கத்தில் இவ்விஷயத்தில் தவறுதல் இல்லை)*

## மாணவர்களுக்கான பத்து கட்டளைகள்

**ராமாயணம் ஸ்ரீநிவாஸன்**

வேத காலத்து ரிஷிகள் மிகச் சிறந்த கல்வியாளர்களாக இருந்து வந்துள்ளனர். தன்னிடம் பயிலும் மாணவனின் கல்வித் திறத்தில் மட்டும் அவர்கள் அக்கறை காட்டவில்லை. மாறாக மாணவன் நல்லதொரு மனிதனாக வாழ வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். தங்களிடம் பயின்ற மாணவர்களை அவர்கள் மதித்தார்கள். அன்போடு நேசித்தார்கள். மாணவர்கள் பிற்காலத்தில் நாட்டின் நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் தீவிரமாகக் கவனம் செலுத்தினார்கள். மாணவர்கள் பிற்காலத்தில் மனித நேயம் மிக்கவர்களாக, நல்ல பண்பாளர்களாக விளங்க வேண்டும் என்ற நோக்குடன் அவர்களை தயாரித்தார்கள். அவர்கள் மாணவர்கட்கு கற்பித்த கல்வியோடு மாணவர்கள் சமூகத்திற்கு எங்கனம் நற்தொண்டு செய்ய வேண்டும் என்றும் இவர்களால் சமுதாயம் முன்னேற வேண்டும் என்றும் விரும்பி அதற்கான முறைகளைக் கற்றுத் தந்தார்கள்.

தங்களுடைய அறிவை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற இறை ஆர்வம் மிகுந்தவர்களாக மாணவர்களைப் பயிற்றுவித்தார்கள். மாணவனை ஒரு நல்ல முழு மனிதனாக ஆக்குவதாக அமைந்திருந்தது அவர்கள் அளித்த கல்வி முறை.

வகுப்பு துவங்கும் முன் ஓர் அமைதி துதி பாடப்படும். அதன் பொருள் - ஆசிரியருக்கும், மாணவனுக்கும் இடையே உள்ள உறவு ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதாக அமையட்டும் என்பதே.

தற்காலத்தில் இந்த சூழ்நிலை அமைந்தால் பல விபரீத சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப்படலாமே.

உபநிடதங்கள் பல உள்ளன. அவற்றில் ஒன்று தைத்திரிய உபநிடதம். அதில் ஒரு பகுதி ஒரு மாணவன் தனது கல்வியை முடித்த பிறகு எத்தகைய வாழ்வு வாழ வேண்டும் என்பதை பற்றி விவரிக்கிறது. மாணவன் **கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை** என்ற இந்தப் பகுதி எல்லா காலத்திற்கும் பொருத்தமானவற்றை விவரிக்கின்றது. அதில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள விதிமுறைகள் தற்காலத்திற்கு மட்டுமல்ல எக்காலத்திற்கும் பொருந்துபவையாக அமைந்துள்ளன.

கல்வி முடிந்தவுடன் மாணவர்கட்கு பட்டமளிப்பு விழா என்று தற்காலத்தில் நடத்தப்படுவதற்கு ஒத்ததாக இதனைக் கருதலாம்.

மாணவப்பருவம் நீங்கி வாழ்வைத் தொடங்க இருப்பவர் ஏதாவது ஒரு வகையில் பொருளீட்டி, தங்களின் குடும்பக் கடமைகளை நிறைவேற்றி, தான் இருந்த சமூகத்திற்குத் தொண்டு செய்து எங்கனம் வாழ வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவதைப் போல, மாணவர்கட்கு பத்து கட்டளைகளை அளிக்கின்றது இந்த உபநிடதம் இந்த கட்டளைகள் தற்காலத்தில் மாணவர்கட்கு பயனுள்ளதாகவும், வழிகாட்டியாகவும் நிச்சயம் அமையும். பழமையானது என்று இதனை தள்ளிவிட முடியாது. மனித சமுதாயம் உள்ளவரை இந்த கட்டளைகள் பின்பற்றப்பட வேண்டியவைகளே. இன்றைய மாணவர்கட்கும் கல்வியாளர்கட்கும் இது பயனுள்ளதாக இருக்கும் என்ற நோக்கத்துடன் தொகுத்து அளிக்கப்படுகிறது.

(தொடரும்)

## சதச்லோகீ - 12

முந்தைய ச்லோகத்தில் உலகத்துயரத்திற்கு காரணமானதும் நிரந்தரமான ஆனந்தத்திற்குக் காரணமானதுமான ச்ரேயஸ்ஸையும் ப்ரேயஸ்ஸையும் நிரூபித்த ஆசார்யாள் அதன் பிறகு முமுக்ஷுவின் நிலையை வர்ணிக்கிறார். மோக்ஷத்தை அடைய விரும்புபவன் முமுக்ஷு எனப்படுகிறான். அவன் இவ்வுலகில் எவ்விதம் நடந்து கொள்வான். எவ்விதம் நடந்தால் அவனுடைய மோக்ஷத்திற்கான பாதை உலகியலால் பாதிக்கப்படாதவண்ணம் நிகழ்ந்தேறும் என்று விவரிக்கிறார். இவ்வுலகிருந்துகொண்டே, செயல்களைப் புரிந்து கொண்டே, பரப்ரஹ்மத்தில் ஈடுபட்டு எல்லாவற்றையும் ப்ரஹ்மமாகக் காணும் பெருவழியை நிரூபித்து இஹைவ ப்ரஹ்ம ஸமச்னுதே என்னும் படி இங்கேயே பேரானந்தப் பெருவெள்ளத்தில் ஈடுபடும் உயர்வழியைக் காண்பிக்கிறார் ஆசார்யாள்.

**आत्माम्भोधेस्तरङ्गोऽस्म्यहमिति गमने भावयन्नासनस्थः**
**संवित्सूत्रानुविद्धो मणिरहमिति वास्मीन्द्रियार्थप्रतीतौ।**
**दृष्टोस्म्यात्मावलोकादिति शयनविधौ मग्न आनन्दसिन्धौ**
**अन्तर्निष्ठो मुमुक्षुः स खलु तनुभृतां यो नयत्येवमायुः।।१२**

செயலீடுபடும்போது ப்ரஹ்மமாகிய கடல் அலை நான் என்று நினைப்பார். அமர்ந்திருக்கும்போது ஞானமாகிய நூல் கட்டப்பட்ட ரத்தினம் நான் என்று நினைப்பர். புலன்களால் அறிவுபெறும்போது அறியப்படுபவை ப்ரஹ்மமே என்றுணர்வர். படுக்கும்போது ஆனந்தக் கடல் மூழ்கியதாக உணர்வர். இப்படித் தனக்குள்ளே ஈடுபட்டு ஆயுளைக் கடத்துபவரே முமுக்ஷு ஆவார் என்கிறார் ஆசார்யாள்.

ஸம்ஸாரமாகிய பாசத்தால் கட்டுண்டவனுக்கு எல்லாவற்றிலும் பற்றுண்டாவதன் காரணம் அவற்றைவேறுபடுத்திக் காண்பதேயாகும். காண்பதெல்லாம் ப்ரஹ்மம் செய்வதெல்லாம் ப்ரஹ்மம் என்னும் உணர்வு தோன்றினாலும் பிறகு அது அனுபவமாகி மோக்ஷத்திற்கு வழிவகுக்கும். அத்தகைய உணர்வு தோன்றவே இத்தகைய உபதேசத்தை அருளியிருக்கிறார் ஆசார்யாள்.

## SŪKTI SUDHĀ

**देवताथितिभृत्यानां पितॄणामात्मन ा यः।**
**न निर्वपति पञ्चानाम् उच्छ्वसन् न स जीवति।।**
**(मनुस्मृतिः ३.७२)**

Devatāthitibhṛtyānāṃ Pitṝṇāmātmanaśca Yaḥ.
Na Nirvapati Pañcānām Ucchvasan Na Sa Jīvati..
(Manusmṛtiḥ 3.72)

He who does not feed these five, the Gods, his guests, those whom he is bound to maintain, the manes and himself, lives not, though he breathes.

## ஸ்ரீ மடத்தின் முக்கிய தினங்கள்

**நவம்பர் 2012**

| | |
|---|---|
| 02 வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| 10 சனி | ஸர்வ ஏகாதசி |
| 11 ஞாயிறு | மஹா பிரதோஷம் தன்வந்த்ரி ஜெயந்தி |
| 13 செவ்வாய் | தீபாவளி/ அமாவாஸை |
| 14 புதன் | அனுஷம்/ ஸ்வர்ண ரத்னம் |
| 16 வெள்ளி | விருச்சிக ரவி ஸங்க்ரமண விஷ்ணுபதி புண்யகாலம் |
| 18 ஞாயிறு | ஸ்கந்த ஷஷ்டி / உத்திராடம் |
| 20 செவ்வாய் | அவிட்டம்/ சரவணபவ ஹோமம் |
| 24 சனி | ஸர்வ ஏகாதசி |
| 25 ஞாயிறு | மஹா பிரதோஷம் |
| 27 செவ்வாய் | பூர்ணிமா பூஜை |
| 28 புதன் | ஸர்வாலய தீபம் |

**டிசம்பர் 2012**

| | |
|---|---|
| 02 ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி |
| 06 வியாழன் | காலபைரவாஷ்டமி |
| 09 ஞாயிறு | ஏகாதசி |
| 11 செவ்வாய் | பிரதோஷம் |
| 12 புதன் | அனுஷம்/ ஸதஸ் / ஸ்வர்ண ரதம் போதாயன அமாவாஸை |
| 13 வியாழன் | அமாவாஸை |
| 15 சனி | தனுர் ரவி ஸங்க்ரமண புண்யகாலம் ஷடசீதி |
| 16 ஞாயிறு | தனுர் மாத பூஜை ஆரம்பம் உத்திராடம் / வேத சதஸ் |
| 18 செவ்வாய் | அவிட்டம் / வேத சதஸ் சரவணபவ ஹோமம் |
| 20 வியாழன் | தனுர்வியதீபாதம் |
| 23 ஞாயிறு | ஏகாதசி (ஸ்மார்த்த) |
| 24 திங்கள் | வைகுண்ட ஏகாதசி |
| 25 செவ்வாய் | பிரதோஷம் |
| 26 புதன் | தத்தாத்ரேய ஜெயந்தி |
| 27 வியாழன் | பூர்ணிமா பூஜை |
| 28 வெள்ளி | ஆருத்ரா தரிசனம் |
| 30 ஞாயிறு | பரசுராம ஜெயந்தி |

## ĀRṢA BODHANAM

युक्तियुक्तं वचो ग्राह्यं बालादपि शुकादपि।
अयुक्तमपि न ग्राह्यं साक्षादपि बृहस्पतेः।।

Yuktiyuktaṃ Vaco Grāhyaṃ Bālādapi Śukādapi.
Ayuktamapi Na Grāhyaṃ Sākṣādapi Bṛhaspateḥ..

Words conjoined with reason should be perceived from a child as well as a parrot. Those devoid of reason should not be grasped, even coming from Brihaspati Himself.

## IMPORTANT DAYS AT SRIMATAM

**NOVEMBER 2012**

| | | |
|---|---|---|
| 02 | Friday | Sankatahara Chaturthi |
| 10 | Saturday | Sarva Ekadasi |
| 11 | Sunday | Mahapradosham / Dhanvantri Jayanthi |
| 13 | Tuesday | Deepavali / Amavasya |
| 14 | Wednesday | Anusham / Swarna Ratham |
| 16 | Friday | Vrichika Ravi Sankaraman Vishnupathi Punyakalam |
| 18 | Sunday | Skanda Shashti / Uthiradam |
| 20 | Tuesday | Avittam / Saravanabhava Homam |
| 24 | Saturday | Sarva Ekadasi |
| 25 | Sunday | Mahapradosham |
| 27 | Tuesday | Poornima Pooja |
| 28 | Wednesday | Sarvalaya Deepam |

**DECEMBER 2012**

| | | |
|---|---|---|
| 02 | Sunday | Sankatahara Chaturthi |
| 06 | Thursday | Kalabhairavashtami |
| 09 | Sunday | Ekadasi |
| 11 | Tuesday | Pradosham |
| 12 | Wednesday | Anusham / Sadas/Swarna Ratham / Bodayana Amavasya |
| 13 | Thursday | Amavasya |
| 15 | Saturday | Dhanur Ravi Sankramana Punyakalam / Shadasiti |
| 16 | Sunday | Beginning of Dhanurmasa Pooja / Uthiradam / Veda Sadas |
| 18 | Tuesday | Avittam / Veda Sadas / Saravanabhava Homam |
| 20 | Thursday | Dhanurvyadipadam |
| 23 | Sunday | Ekadasi(Smartha) |
| 24 | Monday | Vaikunta Ekadasi |
| 25 | Tuesday | Pradosham |
| 26 | Wednesday | Dattatreya Jayanthi |
| 27 | Thursday | Poornima Pooja |
| 28 | Friday | Aarudra Darsanam |
| 30 | Sunday | Parasurama Jayanthi |

ஸ்ரீ காமகோடி
பிரதீபம்
ஸ்ரீ காஞ்சி மடத்தின்
ஆஸ்தான ஆன்மிக மாத பத்திரிகை
விவரங்களுக்கு : 044 27222115 / 27233115

# Cintana - 11

By Krishnan Sugavanam

*Tat Pada Vicāra* – 1

*Śriṣṭi* – Creation

In the previous article, I had said that *īśvara* and *jīva* have to be understood in their entireity in order for us to understand the *mahāvākya, tat tvaṁ asi*. Over the next few articles, we will attempt to have a fuller understanding of who *īśvara* really is.

The most important understanding of *īśvara* is his dimension of being the *abhinna nimmitta upādāna jagat kāraṇam*. Its means the one who is the non-different intelligent and material cause of the *jagat*.

For any creation to come into being, there are 2 primary causes that are required. One is the **intelligent cause** who has the knowledge to meaninigfully produce something to serve a given purpose; and the other is **material cause** from which the object is produced. There are also other **ancillary causes** in order to bring forth creation. For example, in creating a pot, a pot-maker who has the knowledge, skill, power and the desire to create a pot is required; the pot-maker is the intelligent cause of the pot. Clay, assuming that we are creating a mud pot, is also required; clay serves as the material cause of the pot. Ancillary causes such as the wheel, stick etc. are also required in order to make the pot. Thus the pot is created and comes into being.

Extending this analogy, we can postulate that for this *jagat* to have been created, there should have been an intelligent cause, material cause and ancillary causes. The faithful will immediately say that *jagat* is indeed a Creation and *īśvara* is its creator. Before we dwelve into who or what could those causes be, we need to establish that this *jagat* is indeed a creation, and have a clearer understanding of what could be called a creation, since we are not talking about the faithfuls here. We want to address the "rational" thinkers; and every rational thinker must think of cause and effect.

*kāryam, sa kartṛtvaṁ, kāryatvāt, ghaṭavat.* This is the postulation. However, it has a defect. It is like saying, man has 2 legs, therefore, all those which have 2 legs are man. Crow also has 2 legs, therefore crow is a man ☺

I say pot is created, because pot did not exist prior and later it came into being; and I saw both its non-existence and it coming into being with my own eyes. However, how can one say the same of the *jagat*? For one to admit that *jagat* is indeed created, one should have seen its absense prior to its creation. Who has seen the *jagat* being created? Every one has come into being only after the creation of the *jagat*. So what is the *pramāṇam* for us to say the *jagat* is indeed created.

It is only *śāstram* that is *pramāṇam* for *jagat śriṣṭi*. The rational man might say "I don't believe or accept *śāstram*". To him, I would like to point out that there are 2 kinds of beliefs; one is a reasonable belief, and another is unreasonable belief.

An example will make it clear. If I say I was born to a virgin mother and you believe in it, that is unreasonable belief, because it is contrary to what we see in the world. However, if I tell you that I am well read and you believe in it, it is a reasonable belief even though you have actually not seen me attend college. So also accepting *śāstram* as *pramāṇam* for creation is reasonable. How, we shall see, but before that.

What about a ceiling Fan? Can we call it creation? Indeed, but its creation is different from that of a pot. A Fan is assembled, put together. However, everything that is put together cannot be called creation, it has to be meaningfully put-together; else a child's play pen would become a creator's den.

We say "Creation" when things are brought together meaniningfully in order to serve a given one or more purposes. This is called *saṁhati* – assemblage. A Pot, a Fan, a Car, everything is a creation within this definition.

What about this Earth, the Galaxy and the Milky Way? Are they also creations?

The author can be reached on his email krishnan.sugavanam@gmail.com

# ॥ कावेर्यष्टोत्तर शत नाम स्तोत्रम् ॥

## ॥ ध्यानम् ॥

अच्छस्वच्छ लसद् दुकूल वसनां पद्मासनाध्यासिनीम्
हस्त न्यस्त वराभय कलाशां राकेन्दु कोटि प्रभाम् ।
भास्वद् भूषण गन्ध माल्य रुचिरां चारु प्रसन्नाननाम्
श्रीगंगादि समस्त तीर्थ निलयां ध्यायामि कावेरिकाम् ॥

## ॥ स्तोत्रम् ॥

ॐ नमो कावेर्यै ॥

अनन्त गुण गंभीरा अर्क पुष्कर सेविता ।
अमृत स्वादु सलिला अगस्त्य मुनि नायिका ॥ १ ॥

अशान्त कीर्ति तिलका आशुयान विवर्धिनी ।
इतिहास पुराणोक्ता ईति बाधा निवारिणी ॥ २ ॥

उन्मत्त जन दूरस्था ऊर्जितानन्द दायिनी ।
ऋषि संघ सुसंवीता ऋणत्रय विमोचनी ॥ ३ ॥

लुप्त धर्म जनोद्धारा लून भाव विवर्जिता ।
एधिताऽखिल लोकश्रीः ऐहिकामुष्मिक प्रदा ॥ ४ ॥

ओंकार नाद निनदा ओषधी कृत जीवना ।
औदार्य गुण निर्दिष्टा औदासीन्य निवारिणी ॥ ५ ॥

अन्तः करण संसेव्या अच्छ स्वच्छ जलाश्रया ।
कपिलाख्य नदी स्निग्धा करुणा पूर्ण मानसा ॥ ६ ॥

कावेरी नाम विख्याता कामितार्थ फलप्रदा ।
कुंभकोण क्षेत्रनाथा कौतुक प्रथम प्रभा ॥ ७ ॥

खगराज रथोत्साहा रंग स्थल सुशोभिता ।
खगावळी समाक्रान्त कल्लोलावळि मण्डिता ॥ ८ ॥

गजारण्य सुविस्तीर्ण प्रवाह जन मोहिनी ।
गायत्र्याख्य शिला मध्या गरुडासन भक्तिदा ॥ ९ ॥

घन गंभीर निनद निर्जर प्राप्त निर्झरा ।
चन्द्र पुष्कर मध्यस्था चतुरानन पुत्रिका ॥ १० ॥

पोलदेश जनोद्धार ग्रीष्म काल प्रवाहिनी ।
चंचुक्षेत्र समानीता छाद्म दोष निवारणी ॥ ११ ॥

जम्बूद्वीप सरिच्छ्रेष्ठ नदी नद गरीयसी ।
झंकार नाद संमृष्ट षद्वदालि समाकुला ॥ १२ ॥

ज्ञानैक साधन परा ज्ञप्तिमात्राऽर्ति हारिणी ।
टिट्टिभारावसव्याज दिविज स्तुति पात्रिणी ॥ १३ ॥

ठङ्कार नाद संभेद झर्झरी कृत पर्वता ।
डाकिनी शाकिनी संघ निवारण सरित्तया ॥ १४ ॥

ढक्का निनाद पारीण पार्वतीश समाश्रिता ।
णान्त वाच्य द्विजाष्टाङ्ग योग साधन तत्परा ॥ १५ ॥

तरङ्गावलि संविद्ध मृदु वल्लक शोभिता ।
तपस्वी जन सत्कार निवेशित शिलासना ॥ १६ ॥

तापत्रय तरून्मूल गंगादिभिरभिष्टुता ।
थान्त प्रथम संसेव्य साम्ब सान्निध्य कारिणी ॥ १७ ॥

दया दाक्षिण्य सत्कार शील लोक सुभाविता ।
दाक्षिण्य सुजनोद्धार निर्विचार दयान्विता ॥ १८ ॥

धनमान मदान्धादि मर्त्य निर्वर्तन प्रिया ।
नमज् जनोद्धार शीला निमज् जज्जन पावना ॥ १९ ॥

नाकारि केतु निलया नाना तीर्थधिदेवता ।
नारीजन मनोल्लासा नाना रूप फलप्रदा ॥ २० ॥

नारायण कृपा रूपा नाद ब्रह्म स्वरूपिणी ।
पराभूत समस्ताधा पशु पक्ष्यादि जीवना ॥ २१ ॥

पाप तूलाग्नि सदशा पापिष्ठ जन पावना ।
फणीन्द्र कीर्तित कला फल दान परायणा ॥ २२ ॥

बहु जन्म तमो योग फल संप्राप्त दर्शना ।
बाहुरूप द्विपार्श्वस्थ स्वमातृक जलार्थिनाम् ॥ २३ ॥

कलम क्षेत्र शाल्यन्न दान निर्जित वित्तया ।
भगवत् कृत सन्तोषा भास्कर क्षेत्र गामिनी ॥ २४ ॥

भागीरथी समाक्रान्त तुला मास जलाश्रया ।
मज्जद् दुर्जन प्राग्जन्म दुर्जयांहः प्रमार्जिनी ॥ २५ ॥

माघ वैशाखादि मासा स्नान स्मरण सौख्यदा ।
यज्ञ दान तपः कर्म कोटि पुण्य फल प्रदा ॥ २६ ॥

यक्ष गन्धर्व सिद्धाद्यैर् अभिष्टुत पदद्वया ।
रघुनाथ पद द्वन्द्व विराजित शिलातला ॥ २७ ॥

रामनाथ पुर क्षेत्र कामधेनु समाश्रिता ।
लवोदक स्पर्श मात्र निर्वाण पद दायिनी ॥ २८ ॥

लक्ष्मी निवास सदना ललना रत्न रूपिणी ।
लघूकृत स्वर्ग भोगा लावण्य गुण सागरा ॥ २९ ॥

वह्नि पुष्कर सान्निध्या वन्दिताखिल लोकपा ।
व्याघ्रपाद क्षेत्रपरा व्योमयान समावृता ॥ ३० ॥

षट्काल वन्द्य चरणा षट्कर्म नियत प्रिया ।
षडास्य मातृ संसेव्या षड्ूर्मि जितसोर्मिका ॥ ३१ ॥

सकृत् स्मरण संशुद्ध तापत्रय जनाश्रिता ।
सज्जनोद्धार सन्धान समर्थ स्वप्रवाहिनी ॥ ३२ ॥

सरस्वत्यादि देवीभिर् अभिवन्दित निर्झरा ।
सह्य शैल समुद्भूता सह्यासह जनप्रिया ॥ ३३ ॥

संगम क्षेत्र सामीप्या स्वदर्शार्थ चतुष्टया ।
सौभरि क्षेत्र निलया सौभाग्य फल दायिनी ॥ ३४ ॥

संशयाविष्ट दूरस्था सांगोपांग फलोदया ।
हरि ब्रह्मेश लोकेश सिद्ध वृन्दारवन्दिता ॥ ३५ ॥

क्षेत्र तीर्थादि सीमान्ता क्षपानाथ सुशीतला ।
क्षमा तलाखिलानन्द क्षेम श्रीविजयावहा ॥ ३६ ॥

सरिद्वरायाः कावेर्या नाम स्मृतिर् अभीष्टदा ।
क्ष्मातले ऽ लभ्य निखिल क्षेम श्रीविजयावहा ॥ ३७ ॥

**Book Post**






## SRI CHANDRASEKHARENDRA SARASWATHIVISWA MAHAVIDYALAYA
## SCSVMV - UNIVERSITY

(Declared as Deemed to be University Under Section 3 of UGC Act 1956 vide notification No. F-9-9/92 - U.3 dated 26th May 1993 of Govt. of India.)
Managed by Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust, Enathur, Kanchipuram - 631 561. Tamil Nadu
Ph : 044-27264[illegible], Mobile : [illegible] Fax: 044-27264[illegible]
Website : www.kanchiuniv.ac.in E-mail: [illegible]@kanchiuniv.ac.in

### COURSES OFFERED BY OUR UNIVERSITY

**UNDER GRADUATE COURSES**

B.E. – Computer Science & Engineering
B.E. – Electronics & Communication Engineering
B.E. – Electrical & Electronics Engineering
B.E. – Mechanical Engineering
B.E. – Civil & Structural Engineering
B.E. – Electronics & Instrumentation
B.Tech. (IT)
B.A. (Shastri)
B.Sc. (Hons) in Maths / Physics / Chemistry
B.Sc. Computer Science / IT & Management
B.Sc. Optometry
B.Sc. Physician Assistant
B.Sc. Physical Education
B.A.M.S. (Bachelor of Ayurvedic Medicine & Surgery)
B.C.A
B.Ed.

**POST GRADUATE COURSES - REGULAR**

M.B.A. (Finance / Marketing / HR / Systems)
Executive MBA - 15 Months
M.C.A. (Regular / Lateral Entry)
M.C.A. (Executive MCA - 1 Year)
M.C.A. (Integrated) PGDCA
M.E. (Power System)
M.E. (Computer Integrated Manufacturing)
M.E. (Thermal Engineering)
M.E. (Computer Science and Engineering)
M.Sc. Chemistry
Acharya (M.A.) in Nyaya / Vyakarana / Sahitya
M.A. (Sanskrit) with specialisation in Nyaya / Vyakarana / Sahitya / Advaita Vedanta

**RESEARCH COURSES**

M.Phil - Management Studies / M.Phil - Sanskrit
M.Phil - Mathematics / Physics / Chemistry
M.Phil - Computer Science
Ph.D. in all the disciplines

**PART-TIME COURSES**

B.E. – Electrical & Electronics Engineering
B.E. – Electronics & Communication Engg
B.E. – Mechanical Engineering
M.E. (Power System)
M.E. (Computer Integrated Manufacturing)
M.E. (Thermal Engineering)

**CERTIFICATE / DIPLOMA COURSES**

C and C++
.NET
Web Designing
Java
Oracle
CCNA
NSE Certified Capital Market Professional (NCCMP)

### SEE WEBSITE/ PROSPECTUS FOR ELIGIBILITY CRITERIA

Application Form and Prospectus can be obtained:
- In Person by paying prescribed fee by cash / demand draft in favour of "The Registrar, SCSVMV" payable at Chennai from:
- The University Campus at Enathur, Kanchipuram.
- University Liaison Office, [illegible], Luz Church Road, Mylapore, Chennai - 600 004. Ph. [illegible]
- Sri Jayendra Saraswathi Ayurveda College, [illegible], Chennai - 602 103. Ph. [illegible]
- [illegible] Health, Education and Charitable Trust, Plot No. 8, [illegible], Chennai 78. Ph: 044 [illegible]
- Online from www.kanchiuniv.ac.in to be sent along with the prescribed fee by demand draft.

Deadline for receipt of filled-in application – 30 days from the date of declaration of results of respective boards.

For M.B.A programme MAT/CAT/XAT/ICET /D-MAT scores will be given preference.



Published by
Adi Sankara Advaita Research Centre on behalf of
Sri Kanchi Kamakoti Peetam, No.1, Salai Street, Kanchipuram - 631 502
Life Membership Rs. 5,000
(Members will get all publications free of cost)
Life Subscription Rs. 1,500
(Subscribers will get Voice of Sankara twice a year free of cost)
Annual Subscription Rs. 300
(Subscribers will get Voice of Sankara twice free of cost)


To


*Published by:* Adi Sankara Advaita Research Centre, Room No. 7, 2nd Floor, 'Sankaralayam', New No. 66, Mayor Ramanathan Salai, Chetpet, Chennai - 600 031. Phone 044 - 2836 6962, 044 - 2723 3115, Cell : 98407 66538 E-mail : advaitarc@gmail.com
*Printed at* : Jai Ganesh Offset Printers, No. 19, Venkatasamy Lane, Santhome, Chennai - 600 004. Cell : 98401 11457